


உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று (23.06.2025) சென்னை, குருநானக் கல்லூரியில் நடைபெற்ற 49வது பட்டமளிப்பு விழாவில் 36 மாணாக்கர்களுக்கு பதக்கங்களுடன் பட்டமும், 610 மாணாக்கர்களுக்கு பட்டமும் வழங்கினார். உடன் கல்லூரி தாளாளர் மற்றும் பொதுச் செயலாளர் மன்ஜித் சிங் நய்யார், கல்லூரி முதல்வர் முனைவர் இரா.மா.எழிலரசி, பேராசிரியர்கள் மற்றும் உதவி பேராசிரியர்கள் ஆகியோர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 124 வது நாள்!

## திரு.வி.க. நகர் தெற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன்.24-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 124 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (23.6.2025) திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 75 கே.எச் ரோடு, 2) வட்டம் 75 (அ) எஸ்.எஸ்.புரம், சென்னை. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம். சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா. வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ் செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ் குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர். ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. – அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

# சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு: இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

சென்னை, ஜூன் 24 -

சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள்- பாக உறுப்பினர்கள் கூட்டம் நாளை நடைபெறுகிறது. இதில் மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி., மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணயின், கே.எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர். இது குறித்து பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு மேற்கு பகுதி திமுக சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ2) கூட்டம் சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது மண்டல வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் எம்.சி. சைதை மேற்கு பகுதி செயலாளரும் 10வது மண்டல வார்டு குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி. முன்னிலையில் 25.06.2025, புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு சைதாப்பேட்டை எஸ்.பி.எஸ்.திருமண மண்டபத்தில் வைத்து (பழைய நூர்ஜஹான் தியேட்டர்) நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் சென்னை மண்டல தேர்தல் பொறுப்பாளர், ஆ.ராசா எம்.பி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன், சைதை தொகுதி மேலிட பார்வையாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்று வருகிற சட்டமன்றத் தேர்தல் பணிகள் சம்பந்தமான ஆலோசனைகள் வழங்குகின்றனர்.

எனவே நமது சைதை கிழக்கு மேற்கு பகுதியில் உள்ள சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய 256 பாகநிலை முகவர்களை (பி.எல்.ஏ2) நமது பகுதியில் உள்ள 14 வட்ட கழக செயலாளர்களும் வட்டத்தில் உள்ள பாகநிலை முகவர்களை ஒருங்கிணைத்து குறித்த நேரத்தில் கூட்டத்தில் கலந்து கொள்ள செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்

இவ்வாறு சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ், மேற்குப் பகுதிச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், ஜூன்.24-

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு :-

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு கால சாதனைகளை விளக்கிடும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் வரும் 25-06-2025 முதல் 30-06-2025 வரை நடைபெற உள்ளது.



கழக மண்டல பொறுப்பாளர் -வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் - திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர் முனைவர் க. பொன்முடி ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ள இக்கூட்டங்களுக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமை ஏற்க உள்ளார்.

25-06-2025 அன்று திருக்கோவிலூர் கிழக்கு (பேச்சாளர்-ஸ்ரீராம்) மற்றும் விக்கிரவாண்டி கிழக்கு (பேச்சாளர்கள்-காசி.விஸ்வநாதன், வே.வல்லபராசு) ஒன்றியங்களிலும்,

26-06-2025 அன்று மணம்பூண்டி ஒன்றியம் ( பேச்சாளர்-யாசர் அராபத்), அரகண்டநல்லூர் பேரூர் (பேச்சாளர்-சேர்க்காடு கென்னடி) காணை வடக்கு (பேச்சாளர்-ஸ்ரீராம்) ஒன்றியங்களிலும்,

27-06-2025 அன்று காணை தெற்கு (பேச்சாளர்-எழும்பூர் கோபி) திருவெண்ணெய் நல்லூர் பேரூர் (பேச்சாளர்-அப்துல் வகாப்) ஆகிய இடங்களிலும்,

28-06- 2025 அன்று காணை மத்திய (பேச்சாளர்-எழும்பூர் கோபி), முகையூர் வடக்கு (பேச்சாளர்-இன்பக்குமரன்), திருக்கோவிலூர் நகரம் (பேச்சாளர்கள்-கீர்த்தனா, வி.ஆர்.ரவிச்சந்திரன்), விக்கிரவாண்டி பேரூர் (பேச்சாளர்கள்-கே.அஸ்வின் குமார், ப.அன்பரசு) ஆகிய இடங்களிலும்,

29-06-2025 அன்று விக்கிரவாண்டி மேற்கு (பேச்சாளர்-ஆரணி மாலா), திருவெண்ணெய் நல்லூர் மேற்கு (பேச்சாளர்-தூத்துக்குடி சரத் பாலா), கோலியனூர் மேற்கு (பேச்சாளர்கள்-ரோஜா, காசி.கலைச்செல்வன்) ஆகிய இடங்களிலும்,

30-06-2025 அன்று முகையூர் தெற்கு (பேச்சாளர்-சேலம் சுஜாதா), விக்கிரவாண்டி மத்திய (பேச்சாளர்-சிறுவானூர் பரசுராமன்) ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

சட்டப்பேரவை உறுப்பினர் - மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் - மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் அப்துல் சலாம், டி.செல்வராஜ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ள இருக்கும் இக்கூட்டங்களில் ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி, ஆதம்பாக்கம் புனித மார்க் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சண்முகநாதன் ஏற்பாட்டில் விளையாட்டு உபகரணங்களை 178 வது வார்டு மாமன்ற உறுப்பினரும் – மாவட்டப் பொருளாளருமான வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் மாணவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் தலைவர் கிறிஸ்டோபர்,மாவட்ட பிரதிநிதி க.பாலாஜி, வட்டத் துணைச் செயலாளர்கள், என்.முருகன், லா. அலெக்ஸ், பொருளாளர் வேல்முருகன், எஸ். விநாயகமூர்த்தி சதீஷ், சுந்தர், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ள வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சிக்காகோ நகரில் உள்ள மில்லினியம் பார்க் மற்றும் தாவரவியல் பூங்காவை பார்வையிட்டார். உடன் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் குமாரவேல் பாண்டியன் உள்ளார்.

### இந்தியாவிலேயே

# தமிழ்நாடு உயர் கல்வியில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பெருமிதம்!

சென்னை, ஜூன் 24-

இந்தியாவிலேயே தமிழ்நாடு உயர் கல்வியில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று சென்னை குருநானக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றுகையில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் சென்னை, குருநானக் கல்லூரியில் நடைபெற்ற 49-வது பட்டமளிப்பு விழாவில் மாணாக்கர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிதடத்தில் அனைவருக்குமான சமூக நீதி ஆட்சியை சிறப்பாக செயல்படுத்தி வரும் நமது முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய, கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள். தமிழ்நாடு இந்தியாவிலேயே உயர்கல்வியில் முதன்மை மாநிலமாக அனைவருக்கும் முன்னுதாரணமாக திகழ்கிறது.



**கலைஞரால் தொடங்கப்பட்ட கல்லூரி!**

சீக்கிய சமயத்தை தோற்றுவித்த குருநானக் அவர்களின் ஐநூறாவது பிறந்த நாளை முன்னிட்டு, குருநானக் கல்லூரி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1971இல் தொடங்கப்பட்டது. 2021-2022-இல் பொன்விழா கண்டது. உயர்கல்வியை வழங்கி வரும் திறன்மிகு கல்வி நிறுவனங்களில் முன்னோடியாகச் தலைநகர் சென்னைக்கு பெருமை சேர்க்கும் வகையில் இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. அது மட்டுமில்லாமல் கல்லூரியில் அமைந்துள்ள "லங்கர்" (சமபந்தி) எனப்படும் பொதுசமையற்கூடம் வாயிலாக தினசரி 500 மாணவர்களுக்கு தினமும் மதிய உணவு இலவசமாக அளிக்கப்படுவது பெருமைக்குரியதாகும்.

இக்கல்லூரியில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 7,024 மாணவர்கள் திறன் பயிற்சி பெற்றுள்ளனர். முதல் தலைமுறை பட்டதாரிகள் 2,724 பேர், BC/MBC மாணாக்கர்கள் 718 பேர், SC/ST மாணாக்கர்கள் 846 பேர் கல்வி உதவித்தொகை பெற்றுள்ளனர். புதுமைப்பெண் திட்டத்தில் 275 மாணாக்கர்களும் பயன்பெற்றுள்ளனர். தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 247 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். ஆகமொத்தம் 2,086 மாணவர்கள் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற்று வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஒரு சாரார்களுக்கு மட்டுமே உடமையாக இருந்த கல்வியை நீதிக் கட்சியும், திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கடுமையாகப் போராடிப் பெற்ற சமூகநீதி சார்ந்த 'இட ஒதுக்கீடு' கோட்பாட்டின் வெற்றிதான் இது. இன்றைய தலைமுறையினர் இவற்றை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். இது பற்றிய விழிப்புணர்வை இன்றைய இளைய தலைமுறையினர் பெறவில்லை என்றால், பல்லாண்டுகள் நாம் போராடிப் பெற்ற வெற்றியைத் தமிழினப் பகைவர்கள் இளங்கலை படிப் பிற்கே கியூட் என்ற நுழைவுத் தேர்வுகள் மூலம் பறித்துக் கொண்டு விடுவர்.

பொறியியல் கல்விக்கு நுழைவுத் தேர்வு இருந்த காலத்தில் கிராமப்புற மாணவர்கள் 25 ஆயிரம் பேர் சேர்க்கை பெற்றனர். ஆனால், நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்ட பின்னர் கிராமப்புற மாணவர்கள் 77 ஆயிரம் பேராக சேர்க்கை அதிகரித்ததை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**பொது நுழைவுத் தேர்வு சாத்தியமற்றது!**

CUET நுழைவுத் தேர்வை மட்டுமே வைத்து மாணவர்கள் தரத்தை முடிவு செய்வது என்பது முற்றிலும் நயவஞ்சகமானது. இந்தியா முழுவதும் ஒரே பாடத்திட்டம் இல்லாதபோது இந்தியாவிற்கான பொது நுழைவுத் தேர்வு என்பது சாத்தியமற்றது. நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் வணிக ரீதியாகவே செயல்பட்டு, மாணவர்களிடம் பணத்தை பறிப்பதற்காகவே உள்ளன. புதிய கல்விக் கொள்கை மண்பாண்டம் செய்தல், தச்சு வேலை செய்தல் போன்ற குலத் தொழில்களை கற்பிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறது.

இந்தி, சமஸ்கிருதத்தை உள்ளடக்கிய மூன்மொழிக் கொள்கையே புதிய கல்விக் கொள்கை. தமிழக அரசின் இரு மொழிக் கொள்கைக்கு முரணானது. தற்போதுள்ள 10+2+3 என்ற நடைமுறை, மாணவர்கள் எளிதாக பட்டப் படிப்புக்குச் செல்லும் முறை. இந்த கல்வி முறையை மாற்றக் கூடா தென்பதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். இதை எதிர்ப்பதில் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு மட்டும்தான் முன்னணியில் நிற்கிறது.

நமது முதலமைச்சர் தன்னிகரில்லாத தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உயர்கல்வியில் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களுக்குச் சிறிதும் அஞ்சாமல், போராடி வருகிறார். மாணவர்கள் அரசின் "நான் முதல்வன்" போன்ற இத்திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 'நான் முதல்வன்' திட்டம் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தரும். அதைத்தான் நம் முதல்வர் மாணவர்களிடம் விதைத்திட அறிவுறுத்தியுள்ளார்.

இன்று குருநானக் கல்லூரியில் நடைபெறும் 49-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். சிறப்புமிக்க இக்கல்வி நிறுவனத்தில் 7024 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இன்று நடைபெறும் விழாவில் 36 மாணாக்கர்களுக்கு பதக்கதுடன் பட்டமும், 610 மாணாக்கர்களுக்கு பட்டமும் வழங்கப்பட உள்ளது.

நீங்கள் இதுவரை ஒரு மாணவர் என்ற நிலையில் படிக்கும் இடம் சார்ந்தும் உங்களின் பெற்றோரைச் சார்ந்தும் நீங்கள் இருந்திருப்பீர்கள். ஆனால் இன்று முதல் உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனி மனிதராக இந்தச் சமூகம் பார்க்கப்போகின்றது. இந்தச் சமுதாயத்தில் எந்த உயரத்தை எட்ட வேண்டுமோ அதை உங்களின் செயல்களால் நீங்கள் பெற்றுக் கொள்கிற நேரம் வந்துவிட்டது. அதற்கான அடையாளம்தான் இன்று நீங்கள் பெறும் பட்டம்.

நீங்கள் படித்த படிப்பை சரியான சமயத்தில், சரியான முறையில் பயன்படுத்துவதில்தான் உங்கள் வெற்றியும் எதிர்கால இந்தியாவின் வெற்றியும் மனித குலத்தின் வெற்றியும் அமைந்திருக்கின்றது. இன்று நீங்கள் பெறும் பட்டம் உங்கள் வாழ்வில் புதிய வெற்றிகளை முழக்கட்டும். எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணம் செய்யுங்கள். நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் மற்றும் பொதுச் செயலாளர் மன்ஜித் சிங் நய்யார், கல்லூரி முதல்வர் முனைவர் இரா. மா. எழிலரசி, பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# 88வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் சி.சீனிவாசன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 24-

வட்டச் செயலாளர் சி.சீனிவாசன் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு வழிகாட்டுதலின்படி அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ். பி. இராஜகோபால், அம்பத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சன் முனியாண்டி ஆகியோர் முன்னிலையில் வட்ட அவைத் தலைவர் எம்.என். நாகராஜ் தலைமையில் 88வது வட்ட BLA 2 கூட்டம் இன்று (24. 6.2024) மாலை 6 மணி அளவில் கலைவாணர் நகரில் உள்ள வட்ட அலுவலகத்தில் நடைபெறுகிறது.

88-வது வட்டத்துக்கு உட்பட்ட BLA 2 மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு 88-வது வட்டக் கழக செயலாளர் சி. சீனிவாசன் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் பேரூர் மீஞ்சூர் தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு ஆகிய ஒன்றியங்களில் பாக முகவர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் ஆ.ராஜா, க.சு.தமிழ் உதயன் , மு.முரளிதரன், கா.சு. ஜெகதீசன், ஏ.ஆர்.டி.உதயசூரியன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், தொகுதி பார்வையாளர் தமிழ் க.அமுதரசன் ஆகியோர் கலந்து கொண்டு வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பணியாற்றுவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், மாவட்ட துணை செயலாளர் மு.கதிரவன் உள்பட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் உள்ளனர்